2nd August 1966] [Mr. Speaker]

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VI.—ANNOUNCEMENTS—*cont.*

(5) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS (AMENDMENT) BILL, 1966.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966.

VII.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS (AMENDMENT) BILL, 1966.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment) Bill, 1966.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VIII.—PRESENTATION OF REPORT.—REPORT OF THE COMMITTEE ON RULES.

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Rules.

MR. SPEAKER : Now the Hon. Chief Minister will present the First Supplementary Statement of Expenditure for 1966–67.

IX.—POINT OF ORDER *RE.* PRECEDENCE FOR NO-CONFIDENCE MOTION.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை கிளப்பினேன், இது சம்பந்தமாக. எலக்ட்ரிஸிட்டி போர்டு பட்ஜெட் இந்த சபையில் வோட் எடுக்க வேண்டிய விஷயமல்ல. இன்றும், 6-ம் தேதியும் அதைப் பற்றி விவாதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு, துணை மான்யக் கோரிக்கையின் மீதுள்ள விவாதம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதித்து முடிந்த பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே,

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [2nd August 1966

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக்கொண்ட பின்னல்தான் துணை மான்யக் கோரிக்கை பற்றிய விவாதம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னையை நான் வற்புறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில், துணை மான்யக் கோரிக்கை விவாதத்திற்காக நாள் ஒதுக்கியது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையொட்டி அல்ல. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் விவாதிக்கப்பட்டு தேதி குறிப்பிடப்பட்டது. எல்க்ட்ரிஸிட்டி பட்ஜெட் பற்றி விவாதிப்பதற்கு நாட்கள் போதாது என்று சொன்னதின் காரணமாக இன்றும் அதோடு 6-ம் தேதியும் விவாதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. நானே கூட சொன்னேன், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை 3-ம் தேதியே எடுத்துக்கொள்ளலாம் என்று. ஆகவே, அதற்கும் மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் நாளைக்கு அதாவது மூன்றும் தேதியே எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு இந்த விவாதத்தை சட்டசபை நடைபெறுகிற பத்து நாட்களுக்குள் என்றைக்கு வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாம். பத்தாவது நாளோ அல்லது ஒன்பதாவது நாளோ எடுத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கமும் சொல்லி, பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியும் முடிவு செய்தால் அவ்விதமே எடுத்துக்கொள்ளலாம். அதிலும் எந்தவித தவறும் இல்லை. ஆனால் ஒன்று, நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக்கொள்ளும்வரை சட்டசபைக் கூட்டம் நடைபெறவே கூடாது, அதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் நடைபெறக் கூடாது என்று சொல்வது முறையல்ல என்பதைத்தான் நான் நேற்றே கூறினேன்.

MR. SPEAKER : That is what I also feel. Whatever that might be, the proposal regarding the admission of a motion should not bar any other business including the presentation of the Supplementary Statement of Expenditure. Therefore, that question does not arise.

Now the Hon. Chief Minister will present the Supplementary Statement of Expenditure for 1966–67.

X.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1966–67—PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, 1966-67-ம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகளை சபையின் முன் சமர்ப்பிக்கிறேன். பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்தம் 20 கோடியே 72 லட்சம் ரூபாய் ஆகும். அதில் 3 கோடியே 46 லட்சம் ரூபாய் ரெவின்யூக் கணக்கிலும், எஞ்சிய 17 கோடியே 26 லட்சம் ரூபாய் மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.